எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரகம்,
110, அண்ணாசாலை, சென்னை–2.

ஆணையரக வ. ஒ. எண்.க்யூ1/26788/2026 நாள்: 23.10.2026.

பல்கலைக்கழக விடைத்தாட்களை Top Sheet with Inner signature, உடன் gathering செய்யப்பட்ட விடைத்தாட்களை Saddle Wire Stitching (2 pins) பணிக்கான வரையறுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி

"பல்கலைக்கழக விடைத்தாட்களை Top Sheet with Inner signature, உடன் gathering செய்யப்பட்ட விடைத்தாட்களை Saddle Wire Stitching (2 pins) பணி"–க்குவிலை மதிப்பு (Piece Rate Contract) அடிப்படையிலான உறையிடப்பட்ட வரையறுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் தமிழ்நாடு ஆளுநர் சார்பாக எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையின் பொதுமேலாளர் அவர்களால் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப்புள்ளிகளை சமர்ப்பிப்பதற்கான
இறுதி நாள் (ம) நேரம்: 09.11.2026 மு.ப. 11.00 மணி

வ.எண்.	விவரம்	எண்ணிக்கை	பணியின் விவரம்
விலை மதிப்பு (Piece Rate Contract) அடிப்படையிலான Top Sheet with Inner signature உடன் gathering செய்யப்பட்ட விடைத்தாட்களை Saddle Wire Stitching (2 pins) விடைத்தாட்கள் பணி பின்வரும் அலகிற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.			Top Sheet with Inner signature, Saddle Wire Stitching (2 pins)
1.	அரசு கிளை அச்சகம், விருத்தாசலம்	4,00,000	

நிபந்தனைகள் (ம) வரையறைகள்:

I. **முத்திரையிடப்பட்ட உறைகள்:**

ஒப்பந்தப்புள்ளிதாரரால் அனுப்பப்படும் ஒப்பந்தப்புள்ளிகள்"அ", "ஆ", "இ" என மூன்று உறைகள் கொண்டதாக இருக்க வேண்டும்.

I. **உறை–'அ' தொழில்நுட்ப உறை :**

தொழில்நுட்ப உறையில் அளிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்.

ஒப்பந்தப்புள்ளிதாரரின் கையொப்பம் முத்திரையுடன்

a) இவ்வொப்பந்தப்புள்ளியின் படிவம் (ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் அனைத்து பக்கங்களிலும் கையொப்பம் மற்றும் நிறுவனத்தின் முத்திரை இடப்பட வேண்டும்) (All pages of Tender Document should be Rubber Stamped Sealedwith Signature)

b) முன் வைப்புத் தொகை(EMD) தொகையினை 8443001O3AA80102 என்ற கணக்குத்தலைப்பில் E-Challan மூலம் செலுத்தி, அச்செலுத்து சீட்டினை ஆணையரகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

(அல்லது)

c) தேசிய சிறு தொழிலகங்கள் கழகம் மற்றும் தொடர்புடைய வணிகத்தில் சிறு அளவிலான தொழிலகங்கள் Small Scale Industries (SSI) / MSME Certificate

இவ்வுறையின் மேல் "பல்கலைக்கழக விடைத்தாட்களை Top Sheet with Inner signature உடன் gathering செய்யப்பட்ட விடைத்தாட்களை Saddle Wire Stitching (2 pins) **பணிக்கான வரையறுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி" "தொழில்நுட்ப உறை" என எழுதப்பட வேண்டும்.**

d) Pan Card,

e) GST Registration Certificate

f) Copy of cancelled Cheque leaf

g) Not Blacklisted Certificate.

II. **உறை-'ஆ'விலைப்புள்ளி உறை**

விலைப்புள்ளி உறையில் அளிக்க வேண்டிய ஆவணங்கள்.

a) விலைப்புள்ளி (Price Quotation) மட்டுமே இவ்வுறையில் அளிக்கப்பட வேண்டும்.

இவ்வுறையின் மேல் "பல்கலைக்கழக விடைத்தாட்களை Top Sheet with Inner signature உடன் gathering செய்யப்பட்ட விடைத்தாட்களை Saddle Wire Stitching (2 pins) **பணிக்கான வரையறுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி" "விலைப்புள்ளி உறை" என எழுதப்பட வேண்டும்.**

ஒப்பந்தப்புள்ளிதாரரின் கையொப்பம் முத்திரையுடன்

III. <u>உறை–'இ' ஒப்பந்தப்புள்ளிஉறை</u>

<u>பெரிய அளவிலான இவ்வுறையின் உள்ளே 'அ'& 'ஆ'ஆகிய இரு உறைகளையும் வைத்து அனுப்பப்பட வேண்டும். இவ்வுறையின் மேல் 'உறை–இ'–என குறிப்பிட்டு,</u> "பல்கலைக்கழக விடைத்தாட்களை Top Sheet with Inner signature உடன் gathering செய்யப்பட்ட விடைத்தாட்களை Saddle Wire Stitching (2 pins) அரசு கிளை அச்சகம், விருத்தாசலம் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி" என்று மேலெழுதப்பட வேண்டும். ஒவ்வொரு உறையும் தனித்தனியாக பசையினால் ஒட்டப்பட்டு அரக்கினால் முத்திரையிடப்பட வேண்டும்.

1. "பல்கலைக்கழக விடைத்தாட்களை Top Sheet with Inner signature உடன் gathering செய்யப்பட்ட விடைத்தாட்களை Saddle Wire Stitching (2 pins) பணிக்கான ஒப்பந்தப்புள்ளி" அரசு கிளை அச்சகம், விருத்தாசலம் என்று மேலெழுதப்பட்ட ஒப்பந்தப்புள்ளி உறைகள் எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரகம், சென்னை–2–க்கு 09.11.2026 அன்று முற்பகல் 11.00 மணிக்குள் வந்தடைய வேண்டும்.

2. 09.11.2026 அன்று முற்பகல் 11.30 மணிக்கு ஒப்பந்தப்புள்ளி உறைகள் திறக்கப்படும்.

II. <u>முன்வைப்புத் தொகை:–</u>

1. அனைத்து ஒப்பந்தப்புள்ளிதாரர்களும் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள பணியின் மொத்த மதிப்பில் ஒரு (1%) விழுக்காடு பணத்தை முன்வைப்புத்தொகையாக http://www.Karuvoolam.tn.gov.in எனும் வலைதளத்தில் பின்குறிப்பிட்டுள்ள அரசு கணக்கில் செலுத்தி அதற்கான மின்னணு பற்றுச்சீட்டினை (e–challan) இணைக்கவேண்டும். முன் வைப்புத் தொகையை செலுத்துவதற்கான வழிமுறைகள் இணைப்பில் அளிக்கப்பட்டுள்ளது.

8443 00 Civil Deposit–deposit not bearing Interest –
103 Security Deposit–EMD
AA– Security Deposit –State Govt Classification
80102–Non Bearing Interest Receipt
(NewIFHRMS Code 8443 00 103 AA 801 02)

ஒப்பந்தப்புள்ளிதாரரின் கையொப்பம் முத்திரையுடன்

2) முன் வைப்புத் தொகை செலுத்தியதற்கான E-Challan இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் போதிய அளவில் முன்வைப்புத் தொகை செலுத்தாத ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

3) தேசிய சிறுதொழிலகங்கள் கழகம் மற்றும் தொடர்புடைய வணிகத்தில் சிறு அளவிலான தொழிலகங்கள் Small Scale Industries (SSI) முன்வைப்பு தொகை செலுத்துவதிலிருந்து விலக்கு கோரப்படும் நிலையில், உரிய பதிவு சான்றுகளை இணைத்தனுப்ப வேண்டும்.

4) ஒப்பந்தப்புள்ளிதாரர் ஒப்பந்தப்புள்ளியிலிருந்து விலகினால் முன்வைப்புத் தொகை திரும்ப வழங்கப்பட மாட்டாது (ம) பிடித்தம் செய்யப்பட்டு அரசு கணக்கில் செலுத்தப்படும்.

5) ஒப்பந்தப்புள்ளியின் அனைத்து பக்கங்களிலும் கையொப்பம் மற்றும் நிறுவனத்தின் முத்திரை இடப்பட வேண்டும், தவறும் பட்சத்தில் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.

III. ஒப்படைத்தல் / ஒப்படைப்பு:

1. விடைத்தாட்கள் Saddle Wire Stitching Iron Wire Roll இத்துறையினால் வழங்கப்படும். ஒப்பந்தாரர்கள் இப்பணியை மேற்கொள்வதற்கான பணியாட்களை பணியமர்த்த வேண்டும்.

2. இவ்வலுவலக பணியாணையில் நிர்ணயிக்கும் நாட்களுக்குள், ஒப்பந்தம் தொடர்பான அனைத்து பணிகளையும் செய்து முடித்திட வேண்டும்.

3. பணிகளை முடிப்பதில் சுணக்கம் ஏற்படின் முதல் 15 நாட்களுக்கு ஒரு நாளுக்கு ரூ.50/- வீதமும் அதன் பிறகு ஒரு நாளுக்கு ரூ.100/- வீதமும் அதிகபட்சமாக 30 நாட்களுக்கு தண்டத் தொகை விதிக்கப்படும்.

IV. விலை:

1. ஒப்பந்தப்புள்ளிதாரர்கள், தங்கள் சொந்த நிபந்தனைகள், விநியோக விதிமுறைகள் போன்றவற்றுடன் மேற்கோள் காட்ட வேண்டாம் என குறிப்பாக கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒப்பந்தப்புள்ளிதாரரின் கையொப்பம் முத்திரையுடன்

2. விலைப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலைகள் குறைந்தபட்சம் 6 மாத காலத்திற்கு நிலையானதாகும்.

3. சரக்கு மற்றும் சேவை வரியை தனியாக பிரித்து குறிப்பிடவேண்டும்.

V. <u>சிறப்பு நிபந்தனைகள்:</u>

1. இவ்வொந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விடைத்தாட்களின் எண்ணிக்கை தோராயமானதாகும். தேவையை பொறுத்து குறிப்பிட்டுள்ள எண்ணிக்கையை விட மிகுதியாகவோ அல்லது குறைவான எண்ணிக்கைக்கோ பணியாணை வழங்கப்படும்.

2. விடைத்தாட்கள் எண்ணிக்கையை உயர்த்தவோ அல்லது குறைக்கவோ எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையர் அவர்களுக்கு முழு அதிகாரம் உண்டு.

3. எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையர் அவர்களுக்கு எந்தவொரு ஒப்பந்தப்புள்ளியையும் எவ்வித காரணமும் தெரிவிக்காமல் நிராகரிப்பதற்கு முழுஅதிகாரம் உண்டு.

VI. <u>பிணையத் தொகை:</u>

1. ஒப்பந்தப்புள்ளியில் தேர்வாகும் ஒப்பந்தப்புள்ளிதாரர், பணியாணை வழங்கப்பட்ட ஏழு நாட்களுக்குள் பணியின் மொத்த மதிப்பில் 5% விழுக்காட்டிற்கான பிணையத் தொகையை "ஆணையர், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை, சென்னை–2 (The Commissioner, Commissionerate of Stationery and Printing Department, Chennai–2)" எனும் பெயரில் வரைவோலையாகவோ அல்லது E–Challan மூலமாக செலுத்த வேண்டும்.

2. பிணையத் தொகையை குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்தாத ஒப்பந்தப்புள்ளிதாரரின் முன்வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்பட்டு அரசுக் கணக்கில் செலுத்தப்படும்.

ஒப்பந்தப்புள்ளிதாரரின் கையொப்பம் முத்திரையுடன்

3. பட்டியல்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்வு செய்யப்பட்ட பின்னர் முன்வைப்புத் தொகை (ம) பிணையத் தொகை விடுவிக்கப்படும்

VII. <u>ஒப்பந்தம்:</u>

1. பணியாணை வழங்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிதாரர் இத்துறையினால் குறிப்பிடப்படும் வடிவத்தில் ரூ.100/-க்கான வில்லை ஒட்டிய தாளில் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்த படிவம் அளிக்க வேண்டும்.

2. ஒப்பந்தப்படிவம் அளிக்க தவறும் ஒப்பந்ததாரரின் பிணையத் தொகை பறிமுதல் செய்யப்பட்டு அரசுக் கணக்கில் செலுத்தப்படும்.

VIII. <u>பட்டியல் தொகை தீர்வு:</u>

1. பணியாணை மற்றும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் பணிகளை முழுமையாக முடித்த பிறகே அவற்றிற்கான பட்டியல்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்வு செய்யப்படும்.
2. பணியினை தரமாக செய்து முடித்து பணியாணையில் குறிப்பிடப்படும் நாளிற்குள் விடைத்தாட்களை ஒப்படைக்க வேண்டும்.
3. பணியினை மேற்கொள்வதற்காக முன்பணம் வழங்கப்பட மாட்டாது.
4. இப்பணிக்கான பட்டியல் இத்துறையின் மூலம் தீர்வு செய்யப்படும்.

IX. <u>ஒப்பந்த விதி மீறல்:</u>

1. ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளில் ஏதேனும் ஒன்றையோ அல்லது பலவற்றையோ ஒப்பந்தப்புள்ளிதாரர் கடைபிடிக்க தவறினாலோ அல்லது நிறைவேற்ற மறுத்தாலோ அவரால் வழங்கப்பட்ட பிணையத் தொகை பறிமுதல் செய்யப்பட்டு அரசுக் கணக்கில் செலுத்தப்படும்.
2. எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரின் முழுதிருப்திக்கிணங்க ஒப்பந்தத்தை நிறைவேற்றியவுடன் ஒப்பந்ததாரரின் முன்வைப்புத் தொகை மற்றும் பிணையத் தொகை விடுவிக்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளிதாரரின் கையொப்பம் முத்திரையுடன்

X. அதிகார வரம்பு:

1. ஒப்பந்தம் செயலாக்கத்தில் இருக்கும்போது ஒப்பந்தப்புள்ளி விதிகள் குறித்தான உரிமைகள், கடமைகள், பொறுப்புகள் மற்றும் அது தொடர்பாக எழும் வேறுபாடுகள், தகராறுகள் மீது முடிவெடுக்கும் இறுதி அதிகாரம் சம்பந்தப்பட்ட துறையின் அரசு செயலாளருக்கே உள்ளது. மேலும், அவரின் முடிவு ஒப்பந்தத்தின் இருதரப்பினரையும் கட்டுப்படுத்தும்.

XI. தகராறுகள் தீர்வு (Resolution of Disputes)

1. கொள்முதல் செய்பவர் மற்றும் வழங்குநர் ஆகியோருக்கு இடையில், இவ்வொப்பந்தத்திலிருந்து உருவாகும் அல்லது இதனுடன் தொடர்புடைய ஏதேனும் தகராறு அல்லது கருத்து வேறுபாடு ஏற்பட்டால், அந்தத் தகராறு தமிழ்வளர்ச்சி மற்றும் தகவல் துறைச் செயலாளர், தமிழ்நாடு அரசு அவர்களால் தீர்க்கப்படும்.

2. இந்த ஒப்பந்தத்திலிருந்து உருவாகும் அல்லது இதனுடன் தொடர்புடைய அனைத்து தகராறுகளையும் விசாரித்து தீர்ப்பளிக்கும் அதிகாரம் சென்னை நீதிமன்றங்களுக்கு மட்டுமே இருக்கும்.

23/10/2026

பொதுமேலாளர்
ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்,
எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரகம்,
சென்னை-02

23/10/2026

ஒப்பந்தப்புள்ளிதாரரின் கையொப்பம் முத்திரையுடன்

ஆணையரக எண்.க்யூ1/ 26788 /2026

இணைப்பு

வ.எண்.	விவரம்	எண்ணிக்கை	விடைத்தாட்கள்விவரம்
பல்கலைக்கழக விடைத்தாட்களை Top Sheet with Inner signature உடன் gathering செய்யப்பட்ட விடைத்தாட்களை Saddle Wire Stitching (2 pins) பணி பின்வரும் அலகில் மேற்கொள்ளப்படுகிறது.			
1.	அரசு கிளை அச்சகம், விருத்தாசலம்	4,00,000	Top Sheet with Inner signature, Saddle Wire Stitching (2 pins)
மேற்கண்ட பணிக்கு தேவைப்படும் Iron wire roll வழங்கப்படும். Saddle Stitching work Machine ஒதுக்கீடு செய்யப்படும்			

23/10/2026

பொதுமேலாளர்
ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்,
எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரகம்,
சென்னை-02

23/10/2026

ஒப்பந்தப்புள்ளிதாரரின் கையொப்பம் முத்திரையுடன்